# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | சிவகங்கை | காலம் : | 29/04/2023 | முதல் | 03/05/2023 |
| அறிக்கை எண் : | 034/ 2023 | வெளியீட்டு நாள் : | 28/04/2023 | | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (25.04.2023 முதல் 27.04.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –03-05-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23/04 | 24/04 | 25/04 | 26/04 | 27/04 | தேதி | நாள்-5 29/04 | நாள்-5 30/04 | நாள்-5 01/05 | நாள்-5 02/05 | நாள்-5 03/05 |
| 0.0 | 0.9 | 4.9 | 3.6 | 8.6 | மழை (மி.மீ) | 4 | 3 | 2 | 8 | 3 |
| 40 | 39 | 38 | 35 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 34 | 33 | 33 | 32 |
| 24 | 25 | 24 | 24 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 25 | 24 | 23 | 23 |
| 4 | 5 | 6 | 3 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 8 | 7 | 7 | 8 |
| 76 | 75 | 76 | 77 | 78 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 80 | 80 | 90 |
| 84 | 47 | 86 | 84 | 82 | | 40 | 40 | 50 | 50 | 60 |
| 4 | 4 | 7 | 6 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 2 | 6 | 6 | 4 | 4 |
| தென் மேற்கு | தென் கிழக்கு | வட மேற்கு | வட மேற்கு | வட மேற்கு | **காற்றின் திசை** | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் கிழக்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஏப்ரல் 29, 30, மே 1, 3 தேதி லேசான மழையும் மற்றும் 3 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 32°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23°-26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 2 முதல் 6 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## அடுத்த ஆ வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (28 ஏப்-04 மே 2023):

### மழைப்பொழிவு :

28-04-2023 - 04-05-2023: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு.

### அதிகபட்ச வெப்பநிலை :

28-04-2023 - 04-05-2023: மாவட்டத்தில் அதிகபட்ச ஷி. வெப்பநிலையானது பொதுவாகக் இயல்பானது முதல் இயல்பை விட குறைந்து காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

குறைந்தபட்ச ஷி. வெப்பநிலை :

28-04-2023 - 04-05-2023: மாவட்டத்தில் குறைந்தபட்ச ஷி வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

கடந்த சில நாட்களாக, ஒரு சில இடங்களில் கோடை மழை பெய்துள்ளது. அடுத்த சில நாட்களுக்கும் மழை எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் தங்கள் நிலத்தில் கோடை உழவுப் பணியினை மேற்கொண்டு மழை நீர் வீணாகாமல் நிலத்தினுள் சேமிப்பதோடு, மண்ணில் மறைந்துள்ள பூச்சிகளின் முட்டைகள் மற்றும் கூட்டுப்புழுக்களை நிலத்தின் மேற்பரப்பிற்கு கொண்டுவந்து சூரிய ஒளியின் மூலம் அழிக்கலாம்.

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஏப்ரல் 29, 30 தேதி பலத்த காற்று மற்றும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைக பெய்ய வாய்ப்பு. விவசாயிகள், வாழைக்கு முட்டு கொடுத்தல், பப்பாளி, கொய்யா, முருங்கை பயிர்களுக்கு மண் அனைத்தல், கரும்பு பயிருக்கு விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கொடி வகை பயிர்களில் பந்தல்களில் துரு பிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும். கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்** : **வாழை, மிளகாய்**, கால்நடை

**வாழை**:

- வாழை பயிரில் மஞ்சள் இலைப் புள்ளி நோய் **கட்டுப்படுத்த** ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் சூடோமோனஸ் புளுரோசன்ஸ், 10 கிராம் பேசிலஸ் சப்டிலஸ், 10 மில்லி பஞ்சகவ்யம், 5 கிராம் நாட்டு சர்க்கரை இவற்றை கலந்து நன்கு நனையுமாறு காலை அல்லது மாலை வேலைகளில் தெளிக்க வேண்டும்.

**மிளகாய்**:

- மிளகாய் பயிரில் பழ அழுகல் மற்றும் நுனி கருகல் நோய் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 50 முதல் 100 கிராம் என்ற அளவில் சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் கலந்து இலை வழியாக தெளிக்கவும்.
- ரசாயண முறையில் கட்டுப்படுத்த, நடவு செய்த 40 வது நாளிலிருந்து ஒரு ஏக்கருக்கு 1¼ கிலோ தாமிர ஆக்சிகுளோரைடு மருந்தை 20 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்க வேண்டும்.

கால்நடை:

- நிலவும் பருவச் சூழ்நிலையானது கால்நடைகளுக்கு தோல்பகுதியில் தொற்று ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.
- ஆகையால் அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி ஆலோசனையை பெற்றுக் கொள்ளவும்.
- மேய்ச்சலுக்காக கால்நடைகளை நீண்ட தூரம் நடக்க வைக்க வேண்டாம்.

- காල்நடைகளுக்கு அதிக அளவிலான பசுந்தீவனம் மற்றும் அடர் தீவனங்களை கொடுக்கவும். மேலும் காල்நடைகளுக்கு தீவனம் கொடுக்கும் வேளைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும்.